


வெண்ணிலா பிக்சர்ஸ்
அளிக்கும்
விஜேதாவின்
அமரகீதம்
டைரக்ஷன்
வேதாந்தம்ராகவய்யா
Premier

# அமரகீதம்

## நடிகர்கள்

| | | |
|---|---|---|
| N. T. ராமராவ் | .... | மோகன் |
| கும்மடி | .... | டாக்டர் |
| C. S. R. | .... | ரங்கதாஸ் |
| B. N. R. | .... | ராமதாஸ் |
| பேகேடி | .... | ரத்னம் |
| பாலகிருஷ்ணன் | .... | சத்யம் |
| M. வெங்கய்யா | .... | பைல்வான் |
| ராமலிங்கய்யா | .... | வைகுண்டம் |
| மாஸ்டர் பாப்ஜி | .... | சின்ன மோகன் |

## நடிகைகள்

| | | |
|---|---|---|
| ஜமுனா | .... | சாரதா |
| சுரபி பாலசரஸ்வதி | .... | ஜானகி |
| சாயாதேவி | .... | கோவிந்தம்மா |
| சூரிய காந்தம் | .... | அகிலாண்டம்மா |
| பேபி சசிகலா | .... | சின்ன சாரதா |
| பின்னணி | .... | கண்டசாலா, சீகாழி கோவிந்தராஜன் லீலா, ராணி, ஜமுனா ராணி |

தயாரிப்பு :

**S. தேனப்பன்**

டைரக்ஷன் :

**வேதாந்தம் ராகவய்யா**

வசனம் .... "உதயகுமார்"

பாடல்கள் .... கம்பதாசன்

சங்கீதம் .... கண்டசாலா

நடனம் .... பசுமர்த்தி கிருஷ்ணமூர்த்தி

ப்ரொடக்ஷன் எக்ஸிக்யூட்டிவ் .... எஸ். எம். பழனியப்பன்

ஆர்ட் ... கோட் கோங்கர்

மேக்கப் .... K. நாகேஸ்வர ராவ்

நாராயணசுவாமி

வாசு

கேமரா ... V. N. ரெட்டி

... K. V. S. ரெட்டி

எடிட்டிங் .... கந்தசாமி

... B. ஹரிநாராயணன்

காஸ்ட்யூம்ஸ் ... K. அச்சுத ராவ்

ஸ்டில்ஸ் .... M. சத்யம்

(ஜெய் ஹிந்த் ஸ்டுடியோஸ்)

ப்ராசஸிங் ... ஸிந்தே

## உதவியாளர்கள்

டைரக்ஷன் ... K. V. R. கிருஷ்ண ராவ்

ஒலிப்பதிவு ... V. துவாரக் நாத்

... யக்ஞ நாராயண

... S. அப்துல்லா

ஒலிப்பதிவு .... சுந்தரவேலு

... சந்திரன்

வசனம் ... P. சீனிவாசன்

காஸ்ட்யூம்ஸ் ... பாபு ராவ்

ஆர்ட் ... ராம் குமார்

**பிலிம் சென்டர் பிரைவேட் லிமிடெட்**

சென்னை 24

**தமிழ்நாடு சினி லாபரட்டரி**

சென்னை 10

# அமர கீதம்

## கதைச் சுருக்கம்

காதல் ஒரு எரிமலை. கட்டுக்கடங்காதது. குமிறிக் குமிறி உயிரை போக்கிக்கொண்டாவது ஒன்று சேரத் துடிக்கும். காதலர்கள் உள்ளங்களை சித்தரிக்கும் கதைகளே இலக்கிய வானிலே மக்கள் மனதிலே மறையாது மின்னும் விண் மீன்கள். அப்படி அமரத்வம் பெற்ற இரு உள்ளங்களின் எழில் காவியமே "அமர கீதம்".

சாரதா, கிராமப் பள்ளிக்கூட வாத்தியார் ரங்கதாஸ் மகள். மோகன் மிட்டாய் விற்று வாழும் ராமதாஸ் மகன். மோகனும் சாரதாவும் சிறுவயதிலிருந்தே ஒன்ருகப் படித்து, பழகி விளையாடுகிருர்கள். இருவரும் ஊருக்கப்பால் உள்ள மலையடிவாரத்தில் சிறு வீடுகட்டி, ஆளுக்கொரு பொம்மை வைத்து, மலர்ச்செடி நட்டு, நாளும் வளர்த்து விளையாடுவது வழக்கம்.

அவர்கள் நட்ட செடி, ஆணிவேர் பாய்ந்து கொடியாக வளருகிறது. அதே போல் சாரதாவும் மோகனும் வளர்ந்தார்கள். இரு உள்ளங்களிலும் நட்ட அன்பெனும் செடியும் வளர்ந்து காதலெனும் கொடியாக மாறி விடுகிறது. சாரதாவுக்கும் மோகனுக்குமுள்ள அன்பைக் கண்டு, இருவருக்கும் மணமுடிக்க ஏற்பாடு செய்கிருர்கள். பெண்ணுக்குப் பிடித்த நகைகள் வாங்கி வரும்படி மோகனை பட்டணத்துக்கு அனுப்புகிருர் அவன் தந்தை ராமதாஸ்.

நகைகள் வாங்கிக் கொண்டு மோகன் திரும்பும்போது சாரதாவின் தாய் மாமனுன ரத்னம், பழைய விரோதத்தை மனதில் கொண்டு சில முரடர்களை ஏவி மோகனை நன்ருக அடித்து விடுகிருன். தற் செயலாக அங்கு வந்த டாக்டர் கிருஷ்ணன் என்பவர் மோகனைத் தூக்கிச் சென்று ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்கிருர். மோகனுக்கு ஏற்பட்ட பலத்த காயத்திலிருந்து குணமடைய ஒரு வாரத்துக்கு மேலாகும் என்பதை அறிந்து, டாக்டர் கிருஷ்ணனுக்கு சாரதாமேல் ஆசை இருப்பதைத் தெரிந்து கொண்டு, ரத்னம் மோகன் மேல் இல்லாததும் பொல்லாததும் கற்பிக்கிருன். நடக்கப்போக இருக்கும் கல்யாணத்தை கலைத்து, டாக்டருக்கும் சாரதாவுக்கும் திருமணம் நடக்க ஏற்பாடு செய்கிருன். சாரதா, மோகன் நினைவாக அவன் தந்த பொம்மையை

எடுத்துக் கொள்கிறாள். கல்யாணம் நடக்கும் நாள் மோகனுக்கு நினைவு வருகிறது. வேகமாக இரட்டை மாட்டு வண்டியில் வருகிறான். அவனுக்கு எதிரே மணம் நடந்து மேளதாளத்தோடு, சாரதா புருஷன் வீடு செல்கிறாள். மேளவாத்தியத்தில் எருதுகள் மிரண்டு, மோகனை கீழே தள்ளுகிறது. மோகன் கண்கள் போகிறது. அத்துடன் அவன் சாரதா வேறொருவர் மனைவியானதை உணர்கிறான். சாரதா நினைவாக மோகன் அவள் தந்த பொம்மையை எடுத்துக் கொள்கிறான்.

கண் பார்வையும் போய், கண்ணினும் மேலாக எண்ணிய காதலியும் இழந்து வாழ்வதைக் காட்டிலும் இறப்பதே மேல் என்று ரயில் வரும்போது தற்கொலை செய்துகொள்ள முயற்சிக்கிறான் மோகன். தற்செயலாக அங்கே வந்த டாக்டர் அவனைக் காப்பாற்றி வீட்டிற்கு அழைத்துச் செல்கிறார். மோகனுக்கும் சாரதாவுக்கும் உள்ள நேசம் எதையும் அறியாத டாக்டர், மோகனுக்கு தன் மனைவியை அறிமுகம் செய்து, பெயர் ராதா என்றும் சொல்கிறான். மோகனுக்கு சாரதா தான் ராதா என்று தெரியாது. ஆனால் சாரதா மோகன் குருடனாகப் போனதைக் கண்டு குமிறிக் குன்றிப் போகிறாள். வெளியிலே சொல்ல முடியாமல் வேதனையோடு உருகுகிறாள். போதாததற்கு, மோகன் ராதாவை தாயாக எண்ணி சாரதாவைப் பற்றி எல்லாம் பேசி அவள் மனதைக் கதற அடிக்கிறான்.

இதன் நடுவில் மோகனுக்கு பார்வை மீண்டும் வரவழைக்கலாம் என்று டாக்டர் அவனுக்கு ஆப்ரேஷன் செய்து கண் நிச்சயம் வந்து விடும் என்று உறுதி கூறுகிறார். மோகன் ராதாவிடம் (சாரதாவிடம்) தனக்கு கண் வந்ததும் சாரதாவை ஒருதரம் காண வேண்டும். அதுவே அவன் கோரிக்கை என்று வெளியிடுகிறான். ராதா துடிக்கிறாள். என்ன செய்வது என்று திகைக்கிறாள்.

1. மோகன் சாரதாவை சந்திக்கிறானா ?
2. சாரதாவும். ராதாவும் ஒன்றேதான் என்று உணர்ந்து கொள்கிறானா ?
3. மோகனுக்கும் சாரதாவுக்கும் உள்ள காதலை டாக்டர் தெரிந்து கொள்கிறாரா ?
4. மோகன் சாரதா காதலின் முடிவு என்ன ?

இவைகளுக்கு வெள்ளித்திரை பதில் அளிக்கும்.

# அமரகீதம் பாடல்கள்

ராமதாஸ் பாட்டு **பாட்டு 1**

ராம நாம மெனும் மிட்டாயி தருவேன்
வாங்க உலகத்தாரே
ரகுராம நாம மெனும் மிட்டாயி — தருவேன்
வாங்க உலகத்தாரே
நீங்க வாங்க உலகத்தாரே

அல்வா ஜிலேபி கோவா வகைகள்
அன்பிலாழ்ந்து கேளுங்கோ
தாரக நாமம் தனிச்சுவை பக்தியே
ஹரி... ஹரியோ ரங்க ஹரி...
ஹரியோ ரங்க
தாரக நாமம் தனிச்சுவை பக்தியே
தகை தனுலதை வாங்கிட வாங்க (ராம நாம)

பாடியவர் : **சீர்காழி கோவிந்தராஜன்**

மோகன்—சாரதா பாட்டு **பாட்டு 2**

தின்றிட உண்டையா—கொண்டிட உண்டையா—கண்ணு
தின்றால் தின்றிட உண்டு கொண்டால் கொடுக்க உண்டு
கொண்டிடாபோ தே கொசுரீயோம்
தின்றிடா போதே அது போகும் (தின்றிட)

ஹோ...ஹேய்...

பொன்னும் மாளின் ஆசை செல்வனே

கன்னிகை மாப்பிள்ளையே

வாங்கய்யா கோவிந்தய்யா வடை பகோடா இந்தாய்யா

போண்டாவே இந்தாய்யா

கோவா லட்டு தான் இந்தாய்யா

கொப்பரி உருண்டை இந்தாய்யா

நரம்பில்லாத நாவினில் மா மா

கடா புடா மென்று தின்னய்யா

ஹோ...ஹேய்...

படா கோட்டக்கார சிப்பாயின் மகளே

காஞ்சி போன வத்தலானாய்

கங்கா ரென ஆடலானாய்

பூந்தி லாடு தின்றாயானால்

பூதம் போலே ஊதி போவாய் (வாங்கய்யா)

சின்ன அண்ணியே பெரியண்ணியே

சிறிய பட்டடை யணியே

சின்ன வர்கு இத்தை போடு

அண்ணாத்தைக்கு இத்தை போடு

கொஞ்சம் கொஞ்சம் வாயில் போடு

அத்தம் மாளையே ஏச்சி போடு

வாங்கம்மா கோவிந்தம்மோ வடை

லட்டு நீங்கதின்று போங்கம்மா

வாங்கம்மா...வாங்கம்மா...கோவிந்தம்மா...

பாடியவர்கள் : ராணி—ஜமுனா ராணி

மோகன்—சாரதா பாட்டு பாட்டு 3

ஓ......ஓ......ஓ......Hing

சாரதா : கனி தின்ன செம்மாவை நட்டாய் நீ கண்ணே
மோகன் : தலை பின்ன பொன் மல்லி வைத்தாய் நீ பெண்ணே
இருவர் : என் கண்ணே—என் கண்ணே—என் கண்ணே
சாரதா : காலத்தில் இக் கொடி ஓங்கியே வளரும்
மோகன் : தூரான அரும்பது முன் வந்து மலரும்
இருவர் : என் கண்ணே—என் கண்ணே—என் கண்ணே
மோகன் : புஷ்பங்கள் கொய்து
சாரதா : சிறு மாலை செய்து
சாரதா : பின்னல் தன்னில்
மோகன் : அழகாய் வைத்து
சாரதா : அன்போடு நாமே
மோகன் : மகிழ்ந்தே ஆடி
சாரதா : அங்கோடி இங்கோடி ஆகாச மெட்டி ஆகாசம் அப்பாலும் உன் பாசம் ஓங்க
இருவர் : என் கண்ணே—என் கண்ணே—என் கண்ணே
சாரதா : பக்க வீட்டு பையன்தான் பொன்னான சிலையே
மோகன் : பக்க வீட்டு பெண்தானே மரகதக் கிளியே
சாரதா : செம்மையான
மோகன் : சீமை பாதம் பர்பி
சாரதா : நற் பசு தன் பால்
மோகன் : கற் கண்டு போளி
சாரதா : இன்ப மாய்
மோகன் : ஆசையாய்
இருவர் : இன்ப மாய் ஆசையாய் கலந்து தின்போம்
என் கண்ணே—என் கண்ணே—என் கண்ணே

பாடியவர்கள் : ராணி—ஜமுனா ராணி

சாரதா—மற்றும் சில பெண்கள் பாட்டு 4

ஓ............Hing

கோரஸ்: கண்ணன்தானே—என் மன்னன்தானே—
காற்றில் மீதில் பேசும் கானம்
பாடுவோனே சங்கீத லோலன் (கண்ணன்)

சாரதா: நின்னீல கண்கள் நீட்டி நின்ருய் தெரியாத போதே

கோரஸ்: நீட்டி நின்ருய் தெரியாத போதே

சாரதா: வாளான பார்வையில் வந்த காலே வண்ண சின்ன ராஜா

கோரஸ்: வந்த காலே வண்ண சின்ன ராஜா

சாரதா: நீ யாடும் வூாவியில் தாங்கிய வாசம்
கண்ணுர உனே கண்டு காதல் கொண்டேனே

கோரஸ்: (கண்ணன்தானே)

சாரதா: கானத்தில் தேனினே சிந்துவோனே கன உற்ற வானே

கோரஸ்: சிந்துவோனே கன உற்ற வானே

சாரதா: மெய்மரக்கச் செய் பேசுவோனே அன்புடையானே

கோரஸ்: பேசுவோனே அன்புடையானே

சாரதா: அரவின் தலே சிறு நகையால் ஆடி
அனுராக மெய் தென்றல்
அழகென்று நாடி (கண்ணன்தானே)

பாடியவர்கள்: பி. லீலா—கோஷ்டியார்

சாரதா மோகன்—பாட்டு பாட்டு 5

**மோகன்** : ஹேய்! சிறித்தது நிலவே
சம்பங்கி பூவாய்
சின்ன கன்னி மனது
சின்ன கன்னி மீதில் மனது

**சாரதா** : மனம் தந்த சின்ன ராணிக்கு
என் த்யானிக்கு
கண் சைகை மீது மனது

**மோகன்** : ஆ......Hing

**சாரதா** : ஆ......Hing

**மோகன்** : சம்பங்கி காவினிலே
சுற்றும் வண்டு கண்ணினுள்
சின்ன கன்னி சிகையில் இருள் தானே
விண்ணின் வண்ண ரவிக்கையில்—தாரை தானே

**சாரதா** : எண்ணிக்கோ
வர்ண மெண்ணிக்கோ
சித்ர மெண்ணிக்கோ
வர்ண சித்ர மெண்ணிக்கோ
என்னுடைய ஆசை ராஜா

**மோகன்** : ஆ...

**சாரதா** : ஊ...
வசந்த தென்றல் கும குமவாய்—
செவ்வான சந்திரன் ரிமரிமவாய்

**மோகன்** : ஆ......Hing

**சாரதா** : ஆ......Hing

மோகன் : சிலித்திடா பூவின் மூகை
சிறுநகை முகத்தாள்
சின்னுளின் பூத்தபோது
சிற்பத்தில் சிலைகள்—
மல்லிகையாய் விளைந்தாய்
மணமல்லி சாரலிலே

சாரதா : மறைவா—
மனதில் மலர் பாடும் சத்தத்தில்

மோகன் : மனம் தாங்கி விரகத்தால் வந்தது

சாரதா : பாலாம் வெண்ணிலவில்

மோகன் : தமிழ் பாவை வெண்ணிலவில்

பாடியவர்கள் : **கண்டசாலா—பி. லீலா**

சாரதா—மோகன் பாட்டு **பாட்டு 6**

சாரதா : எங்கேதான்—எங்கேதான்—எங்கேதான்

மோகன் : அங்கேதான்—அங்கேதான்—அங்கேதான்

சாரதா : இத்துடிப் பேதுக்கோ
இப்பிகு வேதுக்கோ
ஓ......ஹேய்......
எங்கேதான்—எங்கேதான்—எங்கேதான்—

மோகன் : அங்கேதான்—அங்கேதான்—அங்கேதான்
சிட்டென போயி காற்றன தாவி
கிளி தன்னை சிங்காரம் செய்வேன்—
செங்கிளி தன்னை சிங்காரம் செய்வேன்—

சாரதா : புஷ்பங்களா லா

மோகன் : ஆ ஹா...ரத்னத்தாலே

சாரதா : ஆ...

மோகன் : ஆ...
மானே என் காதலீ பொன்னான பொம்மை

சாரதா : ஓ...ஹோய்...
எங்கே தான்—எங்கே தான்—எங்கே தான்

மோகன் : அங்கேதான்—அங்கேதான்—அங்கேதான்

சாரதா : ஆனல் சொல் வீர் அம்மாது எவளோ

மோகன் : ஆடிப் பாடும் அழகான பாவை

சாரதா : அருந்தல் பா லோ

மோகன் : நெய்யி மிட்டாய்

சாரதா : ஆ...

மோகன் : ஆ...

சாரதா : பக்க வீட்டு பையன்தான் என்னாசை கள்வன்

மோகன் : ஓ ..ஹோய்...

சாரதா : எங்கேதான்—எங்கேதான்—எங்கேதான்

மோகன் : அங்கேதான்—அங்கேதான்—அங்கேதான்

சாரதா : கண்களில் மின்ற சுடர் ஒளியே
கன்னிக்கு நற்பணி தருவாயே
களினந்தருதே நின் சிறு நகை யே
கிளிக்குயர் சிங்காரம் செய்வா யே
என் ராஜா—என் ராஜா—என் ராஜா
மகிழ்வோடு வா ராஜா—வா ராஜா—வா ராஜா

பாடியவர்கள் : கண்டசாலா— பி. லீலா

பாட்டு 7

சாரதா பாட்டு

என்னாளும் நீ என் எழிலின் கனவே
சின்னஞ்சிறு போதினில்
மனம் நின்ற பார்வையில்
மறைவாக போமா
மதி மாறி போமா (என்னாளும்)

கண்ணுர பாாக்கவா
கருணையே செய்ய வா
மிகுந்தது சோகத்தின் கோரிக்கையா (சின்னஞ்)
விளக்கினில் விட்டி லென
வீழ்ந்து விட்டேன் நான்
விதியதோ நீ புகல் என் தேவா (சின்னஞ்)

பாடியவர்: பி. லீலா

மோகன் பாட்டு பாட்டு 8

ஹேய்!
மலரும் நீயே—மா மணம் நானே
என் காதலி—நான் உன் காதலன்
செந்துளிர் மா மரப் பந்தல் தன் கீழே
நின்றனை கிளியாய் எனை நோக்கியே
சிறு நகை சிந்துகிற—சிறு நிலவே
என் ஜீவனே (மலரும்)

கண்களில் காணுது கல்யாண திலகம்
களிப்பாக கல கல நகை காட்டியே
கலை தரு சிங்காரியே
என் காதலி நான் உன் காதலன் (மலரும்)

பூக்களை சிந்தி—பன்னீரை சிந்தி
வாழ்த்தியே உன் வீட்டார்—போ என்றுரே
மனம் கொண்ட கன்னி ராணி
என் வீட்டுக்கு—பொன் வீட்டுக்கு (மலரும்)

பாடியவர்: கண்டசாலா

மோகன் பாட்டு பாட்டு 9

புவி வாழ்வு வீணு—மனதாசை வீணு—ஆசைவீணு
புவிவாழ்வு வீணு—மனதாசை வீணு
மறந்தாயோ உயிர் பாசம்
வான் மதியே வா (புவி வாழ்வு)

கண்ணுலே உயிருந்தி—கலகல நகை சிந்தி
மனம் தன்னில் விளையாடி மறைந்து போனதேன்
மனம் தேடும் பாடல் மலர் மூச்சாம் பாடல்
மறந்தாயோ உயிர் பாசம்
வான் மதியே வா (புவி வாழ்வு)

சின்னஞ் சிறிய வயதில்
கண்ட கனு பலியாதோ
என் காதல் கண்ணீ ராய்
சிந்தும் பாவி நான்
ஆகாச மீதே அழியாத நமதன்பு
அமர கீதம் பாடும் ராக மோகினி (புவி வாழ்வு)

கண்ணில் ஒளியே இல்லே
தீன் மொழியாம் கவியில்லே
மனது தாள வில்லே
னின்னே மறந்த போதே
புவியில் புழுவாய் தவிக்கும்
இவ் வாழ் வேதுக் கோ

பாடியவர்: கண்டசாலா

சாரதா பாட்டு பாட்டு 10

இளங்காலையாச்சே
இருளர என் ஸ்வாமி
பள்ளி விடுத்தே நீ வாடா
பள்ளி விடுத்தே நீ
படுக்கையில் வீணாக
பாசாங்கு செய்யாது வாடா (இளங்)

கல கல வென பக்ஷி குரலோசை கேளாய்
கல்யாண குணதாமா—வாடா
தருணியர் எல்லோரும் தயிர் கடையும் வேளை
தெய்வ ராஜா துயில் நீங்காய் (இளங்)

கண்ணில் வண்ணவாடா—எனை ஈந்த ராஜா
புண்ய ஜோதி வாடா—பூமானே வாடா
கண்ணு உன் அம்மா கோபித்து புகன்றாலே
வெண்ணை தின்றிட நீயே வாராய் (இளங்)

பாடியவர்: பி. லீலா

சாரதா—மோகன் பாட்டு பாட்டு 11

மோகன்: கண் பார்வை இருளாகி உயிர் வாழ்வதோ
இணை சேர்ந்த மனம் தானே பிரிவாவதோ

சாரதா: விழியில்லா சிலை போலே நானாவதோ
மண மல்லி கண்ணீராய் நசி வாவதோ
மனம் கொண்ட சிறியாளின் பேராசையே
கன வான தே (கண்பார்வை)

**மோகன் :** அருளான மொழி பேசி எனை நாடினாய்
சிறு நாளின் கதை யெல்லாம் கறை வானதே
நிலைமாறி தடுமாறி குமை கின்றேனே
நில மீதி லே (கண்பார்வை)

**சாரதா :** நம தென்ற உறவோர்கள் பகை பேசுறார்
கண்மூடி அருள் காதல் தனை யேசுறார்
என்னாளும் நீ யே தான் என் ஜீவனே
என் ஜீவனே

**மோகன் :** சிறு போதின் நம் பாடல் மணி ஓசையே
கடலாக புவிமீது இசை பாடுமே (கண்பார்வை)

பாடியவர்கள் : **கண்டசாலா—பி. லீலா**

**பின்னணி** பாட்டு பாட்டு **12**

மா மர நிழல் தன்னில்
மா னென துள்ளி
மயில் போல நட மாடி
மனம் கொண்ட கள்ளி
தே மதுர தமிழ் போலே
காதல் ஊட்டி
சென்றாயே கதை பேசி
என்னையே வாட்டி

வான் மதியில் முகம் காட்டி
தென்றல் போலே
வழி வந்த விதியாலே
நீ சென்ற தாலே
நான் மரண இருள் தன்னை
காடும் போதும்
நயனத்தில் இரு முல்லை
உதிரல் காணுயோ

பாடியவர் : கண்டசாலா

## Calling Song:

மனம் பாடும் பாடல்
மாசிலா பாடல்
அமர கீதம் கேளாய் கண்ணே

மாலையின் வேளை
மல்லிகை மாலை
ஏற்றிட நீயே வாராய் கண்ணு

பாடியவர்கள் : கண்டசாலா—பி. லீலா

சாந்தி பிரஸ், சென்னை-1